**பஸ்கா 2019**

# Passover

## நமது கர்த்தராகிய கிறிஸ்து "யெஷுவா"வின் ஞாபகார்த்த நாள் – பஸ்கா - 2019

நமது கர்த்தராகிய கிறிஸ்து "யெஷுவா"வின் ஞாபகார்த்த நாள் இந்த வருடம் **2019** வரும் **ஏப்ரல் 20** (சனிக்கிழமை), சூரியன் அஸ்தமனத்திற்குப் பின்பு ஆரம்பிக்கிறது. ஞாபகார்த்த ஆராதனை பிற்பகல் **3:30** மணிக்கு ஆரம்பிக்கிறது.

(2019 ஏப்ரல் 20 சூரிய அஸ்தமன நேரம் 18:22)

**Aviv Barley Report: April**

**பார்லி அறிக்கை-ஏப்ரல்:**

ஏப்ரல் 5ம் தேதி பார்லி கதிர் விளைச்சல் தேடலுக்கு பின் தேவையான அளவு விளைந்த கதிர்கள் இருப்பது உறுதி செய்யப்பட்டது. ஆகவே இந்த அறிக்கை வரும் முதல் பிறையில் புது வருடம் (ஆபிப் மாதம் முதல் நாள், ஏப்ரல் 7ம்தேதி சூரியன் மறைந்தபின் ) ஆரம்பிக்கிறது என்பதை உறுதி செய்தது.

**பிறை பார்த்தல் அறிக்கை:**

இஸ்ரேலில் இருந்து வந்த அறிக்கைகளின்படி ஏப்ரல் 7 (ஞாயிற்று கிழமை) மாலை 6:20 மணிக்கு முதல் பிறை இஸ்ரேலில் காணப்பட்டது. ஆகவே ஏப்ரல் 7 அந்திநேரத்துக்கு பின்பு புதிய வருடத்தின் முதல் நாள் ஆரம்பிக்கிறது (ஆபீப் **1ம் நாள்** – ஏப்ரல் 7 அந்திநேரத்தில் இருந்து ஏப்ரல் 8ம் தேதி அந்திநேரம் வரை.)

ஆகவே ஆபீப் 14ம் நாள், ஏப்ரல் 20ம் தேதி(சனிக்கிழமை) அந்திநேரத்துக்கு பின்பு ஆரம்பிக்கிறது.

✡✡✡✡✡✡✡

**பார்லி பசுங்கதிர் அறிக்கை -மார்ச் 2019**

இந்த வருடம் இஸ்ரேலிய புதிய வருடபிறப்பை நிர்ணயிக்கும் பார்லி கதிர் விளைச்சலை பற்றிய அறிக்கை வந்துள்ளது. முதிர்ச்சியடைந்த பார்லி பசுங்கதிர்கள் போதுமான அளவு இல்லை என்பது தெரிவிக்கப்பட்டுள்ளது.

கதிர்க்கட்டை அசைவாட்டும் பலிக்கு போதுமான அளவு விளைந்திருக்க வேண்டும். ஆபீப் மாதம் 16ம்தேதி கதிர்க்கட்டு நெருப்பில் வாட்டி புசிப்பதற்கு போதுமான அளவு காய்ந்த நிலையை அடைய வேண்டும்.

அப்படி போதுமான அளவு கதிர்கள் அசைவாட்டும் பலிக்கு தயாராகவில்லை என்பதால், இந்த வருடம் லீப் வருடமாகிறது. ஆகவே 13வது மாதமாக இந்த மாதம் சேர்த்துக் கொள்ளப்படுகிறது.

ஆகவே பெரும்பாலும் ஏப்ரல் **6** தேதி தோன்றும் முதல் பிறையில் இருந்து இஸ்ரயேலுக்கான புதிய வருடம் ஆரம்பமாகும். ஆகவே அந்த ஆபீப் மாதம் **14**தேதி பஸ்கா நாள் என்பது நமக்கு **ஏப்ரல் 19**ம்தேதி சூரியன் மறைந்த பிறகு ஆரம்பிக்க வாய்ப்புள்ளது. இதை அடுத்த முதல் பிறை தெரிந்ததும் உறுதிப்படுத்துகிறோம்.

✡✡✡✡✡✡✡

**பஸ்கா - 2018**

## நமது கர்த்தராகிய கிறிஸ்து "யெஷுவா"வின் ஞாபகார்த்த நாள் – பஸ்கா - 2018

நமது கர்த்தராகிய கிறிஸ்து "யெஷுவா"வின் ஞாபகார்த்த நாள் இந்த வருடம் 2018 வரும் **மார்ச் 31** (சனிக்கிழமை), சூரியன் அஸ்தமனத்திற்குப் பின்பு ஆரம்பிக்கிறது. ஞாபகார்த்த ஆராதனை பிற்பகல் 3:30 மணிக்கு ஆரம்பிக்கிறது.

(2018 மார்ச் 31 சூரிய அஸ்தமன நேரம் 18:20)

Aviv Barley Report: March

**பார்லி அறிக்கை** மார்ச் **18**ம் தேதி வரும் முதல் பிறையில் புது வருடம் (ஆபிப் மாதம் ) ஆரம்பிக்கிறது என்பதை உறுதி செய்தது.

**பிறை பார்த்தல் அறிக்கை**:

இஸ்ரேலில் இருந்து வந்த அறிக்கைகளின்படி மார்ச் **18** (ஞாயிறு) மாலை 6:12 மணிக்கு முதல் பிறை இஸ்ரேலில் காணப்பட்டது. ஆகவே மார்ச் **18** அந்திநேரத்துக்கு பின்பு புதிய வருடத்தின் முதல் நாள் ஆரம்பிக்கிறது (ஆபீப் 1ம் நாள் - மார்ச் 18 அந்திநேரத்தில் இருந்து மார்ச் 19 அந்திநேரம் வரை.)

ஆகவே ஆபீப் 14ம் நாள், மார்ச் **31**ம் தேதி(சனிக்கிழமை) அந்திநேரத்துக்கு பின்பு ஆரம்பிக்கிறது.

✡✡✡✡✡✡✡

**பஸ்கா - 2017**

## நமது கர்த்தராகிய கிறிஸ்து "யெஷுவா"வின் ஞாபகார்த்த நாள் – பஸ்கா - 2017

நமது கர்த்தராகிய கிறிஸ்து "யெஷுவா"வின் ஞாபகார்த்த நாள் இந்த வருடம் 2017 வரும் **ஏப்ரல் 11**(செவ்வாய்

கிழமை), அந்திநேரத்திற்கு பின்பு ஆரம்பிக்கிறது. ஞாபகார்த்த ஆராதனை பிற்பகல் 3:30 மணிக்கு ஆரம்பிக்கிறது.

Abib Update: 3/30/2017 12:58 AM

**பார்லி அறிக்கை** மார்ச் 29ம் தேதி வரும் முதல் பிறையில் புது வருடம் (ஆபிப் மாதம் ) ஆரம்பிக்கிறது என்பதை உறுதி செய்தது.

**பிறை பார்த்தல் அறிக்கை:**

இஸ்ரேலில் இருந்து வந்த அறிக்கைகளின்படி மார்ச் 29 (புதன்) மாலை முதல் பிறை இஸ்ரேலில் காணப்பட்டது. ஆகவே மார்ச் 29 அந்தி நேரத்திற்கு பின்பு (7 மணிக்கு பின்பு) புதிய வருடத்தின் முதல் நாள் ஆரம்பிக்கிறது (ஆபீப் 1ம் நாள்).

ஆகவே ஆபீப் 14ம் தேதி ஏப்ரல் 11ம் தேதி அந்திநேரத்திற்கு பின்பு ஆரம்பிக்கிறது.

✡✡✡✡✡✡✡

## நமது கர்த்தராகிய கிறிஸ்து "யெஷுவா"வின் ஞாபகார்த்த நாள் – பஸ்கா - 2016

நமது கர்த்தராகிய கிறிஸ்து "யெஷுவா"வின் ஞாபகார்த்த நாள் இந்த வருடம் 2016 வரும் மார்ச் 23, மாலை 6:00 P.Mமணிக்கு பின்பு ஆரம்பிக்கிறது.

இஸ்ரேலில் இருந்து வந்த அறிக்கைகளின்படி மார்ச் 10 (வியாழன்) மாலை முதல் பிறை இஸ்ரேலில் காணப்பட்டது. ஆகவே மார்ச் புதிய வருடத்தின் முதல் நாள் ஆரம்பிக்கிறது. (ஆபீப் 1ம் நாள்).

**பார்லி பசுங்கதிர் அறிக்கை:**

இஸ்ரயேல் தேசத்திலிருந்து வந்த பார்லி ஆய்வு முடிவு அறிக்கைகளின் படி முதற்பலனாக யாவே தேவனின் சந்நிதியில் அசைவாட்ட போதுமான அளவு விளைந்த பார்லி பசுங்கதிர்கள் காணப்படுகிறது. விளைச்சலில் முதற்பலனாக விளைந்த கதிர்களை காணிக்கையாக செலுத்த தாமதிக்கக் கூடாது என்ற கட்டளையின்படி போதுமான அளவு கதிர்கள் இருப்பதால் இந்த முதல் பிறை நாள் புதிய வருடத்தின் முதல் நாளாக, ஆபீப் முதல் தேதியாகிறது.

ஆகவே கர்த்தரின் ஞாபகார்த்த நாளை, புதன் கிழமை- மார்ச் 23ம் நாள் மாலை ஆறு மணிக்கு மேல் ஆசரிக்க வேண்டும். இந்த நாளை சரியானபடி ஆசரிக்க தேவன்தாமே கிருபை செய்து ஆசீர்வதிப்பாராக.

Barley Reports form Israel:
abibofgod.com/resources/Abib+Report+Thursday+March+10+2016.pdf
Yahweh's Obedient Servants

✡✡✡✡✡✡✡

## நமது கர்த்தராகிய கிறிஸ்து "யெஷுவா"வின் ஞாபகார்த்த நாள் – பஸ்கா -2015

நமது கர்த்தராகிய கிறிஸ்து "யெஷுவா"வின் ஞாபகார்த்த நாள் இந்த வருடம் 2015 வரும் ஏப்ரல் 3, மாலை 6:00 P.Mமணிக்கு பின்பு ஆரம்பிக்கிறது.

இது கணக்கிடப்படும் விவரம்: (All times Greenwich Mean Time: ) இளவேனில் கால சம பகல் இரவு மார்ச் 21, சனிக்கிழமை4:11 p.m IST மணிக்கு வந்திருக்கிறது . இந்த சம பகல் இரவிற்கு பின் வரும் முதல் பிறை (New Moon) இஸ்ரயேலில் மார்ச் 21, 6:00 p.m மணிக்கு தோன்றியது. ஆகவே நிசான் மாதம் (ஆபீப்) 1ம் தேதி மார்ச் 21, 6:00 p.m முதல் மார்ச் 22, 6:00 p.mவரை. **நிசான் 14ம்** தேதி அதற்கு பிறகு 13 நாட்களுக்கு பின்பு **வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 3ம்** தேதி , 6 p.m மணிக்கு ஆரம்பித்து ஞாயிறு ஏப்ரல் **4**, 6:00 p.m மணிக்கு முடிவடைகிறது.

ஆகவே கர்த்தரின் ஞாபகார்த்த நாளை, **வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 3ம்** தேதி 6:00 p.m மணிக்கு மேல் ஆசரிக்க வேண்டும். நாம் இந்த நாளை சரியானபடி ஆசரிக்க தேவன்தாமே கிருபை செய்து ஆசீர்வதிப்பாராக.

✡✡✡✡✡✡✡

http://whenisthenewmoon.com/
http://www.learnfromthebible.org/new-moon.html
http://www.renewedmoon.com/
https://yrm.org/